
R/L/1

# முயல் வளர்ப்பு

ජනපද පශු වෛද්‍ය නිලධාරි
කෝපායි
அரசாங்க கால்நடை வைத்தியர்
கோப்பாய்
GOVT. VETERINARY SURGEON
KOPAY



பிரசுரிப்போர்

விலங்கு சுகாதார மனிதவள அபிவிருத்திப் பிரிவு

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,

கற்றம்பே, பேராதனை.

விலை : ரூபா 3/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| முயலிறைச்சியிலுள்ள உணவுச்சத்துக்கள் .. | 5—7 |
| முயல் வர்க்கங்கள் .. .. .. | 8 |
| இனப்பெருக்கத்துக்காக முயல்களைத் தெரிவுசெய்தல் .. | 8—9 |
| இனப்பெருக்கம் .. .. .. | 9—10 |
| முயல்களின் கூடு அமைத்தல் .. .. | 10 |
| உணவும் பாரமரிப்பும் .. .. .. | 13—14 |
| சினைப்பட்ட முயலும் குட்டிகளின் பராமரிப்பும் .. | 14 |
| இறைச்சிக்காக சந்தைப்படுத்தல் .. .. | 15 |
| நோய் .. .. .. | 15 |
| மேலதிகலாபம் .. .. .. | 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயலிறைச்சியிலுள்ள உணவுச்சத்துக்கள்

முயலிறைச்சி உணவிற்காகப் பாவிப்பதற்கு மிகவும் சிறந்தது. மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றியிறைச்சி ஆகியவற்றுடன் முயலிறைச்சியை ஒப்பிடும்போது முயலிறைச்சி எவ்வகையில் சிறந்ததென்பதை கீழ்வருவனவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.










| | புரதம் | கொழுப்பு | கனிப்பொருள் |
|---|---|---|---|
| முயலிறைச்சி | 20.5 | 4 | 1.5 |
| மாட்டிறைச்சி | 18.5 | 18 | 0.9 |
| ஆட்டிறைச்சி | 17.0 | 25 | 1.0 |
| பன்றியிறைச்சி | 16.0 | 27 | 1.0 |


இதிலிருந்து முயலிறைச்சியில் அதிகளவு புரதமும், கனியுப்புக்களும் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் கொழுப்பும் குறைவாக இருப்பதினால் மனித உணவிற்கு முயலிறைச்சி மிக உகந்ததாகிறது. அத்துடன் முயல்வளர்ப்பு மிக இலாபகரமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முயல்கள் வெகுவிரைவில் இனம்பெருக்கக்கூடியவை (ஒரு பெண்முயல் ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட **32** குட்டிகளை ஈனும்).



இவ்வாறு **2—3** வருடங்களிற்கு ஒரு பெண் முயல் தொடர்ந்து குட்டிகளை ஈனும்




முயல்வளர்ப்பும் முயலிற்கு உணவூட்டலும் மிகக் குறைந்த செலவில் இலகுவில் செய்து கொள்ளலாம்.






முயலின் பிரதான உணவான புல் இலைகுழை உணவு, அவரையினத் தாவரங்கள் மற்றும் கிழங்குவகைகளை எங்கும் இலகுவில் பெற்றும் கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலிற்கு கூடமைப்பதற்கு
அதிக செலவாகாது.



முயலின் மலம் மற்றும்
கழிவுகளை உரமாகப்
பாவிக்கலாம்



முயலின் தோலிலிருந்து
உடை, தொப்பி ஆகி
யன உற்பத்தி செய்யக்
கூடுமாதலால் அதன்மூலம்
மேலதிக பணம் சம்பாதிக்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முயல் வர்க்கங்கள்


எமது நாட்டிற்கு நடுத்தர அளவான, வெள்ளைநிறமான, கட்டையான உரோமத்தையுடைய, முயல்களை வளர்ப்பதற்கு உகந்தவை. இதனால் நியூசிலாந்தைச் சேர்ந்த வெள்ளை முயலினமும் மற்றும் கலிபோனியா இனமும் மிகவும் சிறந்தவை.

**மற்றும் பிரசித்திபெற்ற முயலினங்களாவன.**

இமாலய இனம்
பெரிய பிளேமின் இனம்
பெவறன்
சன்சிலா
இடச்சு பிரஞ்சுலொப்
ரெக்ஸ்



நியூசிலாந்து வெள்ளை முயல்
(நிறை 9—12 இரு.)



கலிபோனியா முயல்
(நிறை 8—12 இரு.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பெருக்கத்திற்காக முயல்களைத்தெரிவு செய்யும் போது பின்வரும் குறிகளை அவதானித்து தெரிவு செய்யவும்.

**வயது.**—8—10 கிழமை வயதுடைய முயல்களைத் தெரிவு செய்தல்.

**சௌக்கிய நிலை.**—நன்கு வளர்ந்த வளரக்கூடிய நிலையிலுள்ள குட்டிகளாக இருக்க வேண்டும்.

**தோலும் உரோமமும்.**—மிருதுக்கமாகவும் மென்மையானதாகவும் இருக்க வேண்டும்.

**கண்கள்.**—மிகவும் பளபளப்பாக இருக்க வேண்டும்.

**கால்கள்.**—திடமாகவும், நேராகவும் இருக்கவேண்டும்.

**நோய்கள்.**—நோயில்லாது இருக்க வேண்டும்.

**இனப்பெருக்கத்துக்காக முயல்களைத் தெரிவுசெய்தல்**

இனப்பெருக்கலுக்காக முயல்களைத் தெரிவுசெய்யும் போது கவனிக்க வேண்டிய குறிகளாவன :—

1. சரீர அமைப்பு :—நடுத்தர உடல்.

நல்ல உடலமைப்புள்ள முயல்களின் கால்களிலும் உடலிலும் இறைச்சி அதிகளவு காணப்படும்.

2. தெரிவு செய்யப்பட்ட முயல்களில் காணப்படவேண்டிய குறிகள் :

பால் மறப்புக்காலத்தில் உடல்நிறை அதிகமாக இருக்க வேண்டும்.

ஒரு ஈற்றில் அதிகளவு குட்டி ஈனுதல் வேண்டும். குட்டிகளை நன்கு பராமரிக்கும் திறனுடையதாக இருக்க வேண்டும்.

சுறுசுறுப்பானதாக இருக்கவேண்டும்.
குட்டிகளில் நிறை அதிகரிப்பு விரைவாக இருக்கவேண்டும்.
பிறந்த குட்டிகளில் கூடிய எண்ணிக்கையானவை தப்பிப் பிழைக்கும் வல்லமையுடையனவாக இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3.** தெரிவு செய்யப்படும் தாய் தகப்பனின் இயல்புகளும் மேற்கூறிப் பிட்டனவாகவிருப்பின் பரம்பரை சிறந்ததாக அமையும்.

**இனப்பெருக்கம்.**—முயல்களில் இனப்பெருக்கத்தை ஆரம்பிக்கும் போது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத நல்லின பரம்பரைகளில் இருந்து ஆண் பெண் முயல்களைத் தெரிவுசெய்து சேர்க்கும்போது தான் நல்ல இயல் புடைய குட்டிகள் பிறக்கும். விரைவில் வளரக்கூடிய சிறந்த முயல்களை இறைச்சிக்காக வளர்ப்பதாயின் இறைச்சிக்கு உகந்த இனங்களைத் தெரிவு செய்து அவற்றை கலப்பினப்பெருக்கம் செய்வதன்மூலம் இலாபத்தை எதிர்பார்க்கலாம்.

உதாரணமாக :

| | | |
|---|---|---|
| பெரிய பிளேமின்<br>(ஆண்) | X | நியூசிலாந்து வெள்ளை<br>(பெண்) |


விரைவில் வளரும் கலப்புக்குட்டி

கலப்பின்மூலம் பிறந்தகுட்டிகளை மீண்டும் இனப்பெருக்கத்திற்கு பாவிப் பது இலாபகரமற்றது.

## முயல்களிற்குக் கூடமைத்தல்

மிகவும் உஷ்ணமான இடங்கள் முயல் வளர்ப்பதற்குச் சிறந்ததல்ல. உஷ் ணம்கூடிய இடங்களில் வளர்ப்பின் இனப்பெருக்கம் ஓரளவு பாதிக்கப்படும். ஆகவே முயற் கூடுகளை குளங்களிற்கு அருகாமையான இடத்திலோ அன்றி நீர்த் தேக்கமான இடங்களுக்கு அருகாமையில் அமைப்பது சிறந்தது. அத்துடன் கூடுகளை விசாலமான மரங்களின் கீழோ அல்லது ஒரு கொட்டிலினுள் அமைப்பது நன்று.

### கொட்டிலினுள் அமைக்கப்பட்ட கூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூடு அமைப்பதற்கு தேவையான பொருட்கள்:—**

கிராமத்தில் கிடைக்கக்கூடிய பொருட்களாவன :—மூரி மட்டை, கமுகம் சிலாகை, பனம்சிலாகை, கிடுகு, வைக்கோல் ஆகியவற்றையும் தேவையாயின் கம்பிவலையும் பாவிக்கலாம்.


**கூட்டான கூடுகள்**


குட்டிகள் 3—3 ½ மாத வயதையடையும் வரை கூட்டமாக ஒரே கூட்டில் வளர்க்கலாம். ஒரு குட்டிக்கு 2 சதுர அடி வீதம் 20 குட்டிகளிற்கு ஒரு கூடாக அமைப்பது சிறந்தது.

**கூட்டின் கூரை**

இதற்கு கிடுகு, வைக்கோல்
அலுமினியம் தகடு
அஸ்பெஸ்ரஸ் தகடு
பாவிக்கலாம்.








**கூட்டின் நிலம்**

இதற்கு சிலாகைத் தளமோ அல்லது ½ அங்குல வலையைக் கொண்டு தளத்தை அமைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கூட்டின் பக்கங்கள்**

பக்கங்களை கமுகம்சிலாகை அல்லது பனம்சிலாகை கொண்டு 1/2–1 அங்குல இடைவெளிக்கு ஒன்றாக அமைக்கவும்.



**ஆண் முயல்களிற்கான கூடமைத்தல்**


ஆண் முயல்களை எப்பொழுதும் தனித்தனியாகவே வளர்த்தல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்முயல்களிற்கான கூடமைத்தல்**

பெண் முயல்களுடன் குட்டிகளையும் ஒருமித்து வளர்க்க வேண்டுமாதலால் பெண்முயல்களிற்கு பெரிய கூடமைத்தல் அவசியமாகும்.




**உணவும் நீரும்**

நீர் :— சுத்தமான நீர் எந்நேரமும் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். பெண்முயலிற்கும் குட்டிகளுக்குமாக ஒரு நாளைக்கு 1—2 கலன் நீர் அவசியம் ஒரு பாத்திரத்தில் அருந்தக் கொடுத்தல் வேண்டும்

உணவு :—முயல்களிற்கு கீழ்வரும் உணவுகளை வழங்கலாம்.

| | |
|---|---|
| புல் | கீரை, முள்முருக்கு |
| உழுத்தம் கோது | புண்ணாக்கு |
| இபில் இபில் | கனிப்பொருட்கலவை |
| வத்தாளை, கரட் | பிரதானமாகக் கொடுத்தல் அவசியம். |

இலைகுழைகளைக் கொடுக்கும்போது பூக்கமுன் வெட்டிக்கொடுத்தல் வேண்டும்.

ஒரு நாளைக்கு காலை ஒரு தரமும் மாலை ஒருதரமும் கொடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பராமரிப்பு

5—6 மாத வயதுடைய பெண்முயல்களை இனப்பெருக்கத்திற்கு உட்படுத்தலாம். இக் காலத்தில் இவற்றின் நிறை சராசரியாக 7 இறுத்தல் இருக்கவேண்டும். ஒரு ஆண் முயலுடன் 10 பெண்முயல்களை சேர்க்கைக்குப் பாவிக்கலாம். பெண்முயல்கள் எந்தவித வேட்கைக் குறிகளையும் காட்டமாட்டாது. பெண்முயலை ஆண்முயலின் கூட்டினுள் ஒரு நாள் முழுவதும் தங்கவிட்டு சேர்க்கையை மேற்கொண்டபின் அப்புறப்படுத்த வேண்டும்.

### சினைப்பட்ட முயலும், குட்டிகள் பராமரிப்பும்

**சினைக்காலம்.**—முயல்களின் சினைக்காலம் 30 நாட்களாகும். சேர்க்கையின் பின் 14 நாட்களில் கால்நடை வைத்தியரின் உதவியுடன் முயல் சினைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ளலாம்.

**குட்டிஈனல்.**—குட்டியீன சில தினங்களுக்கு முன்பே தாய் முயல் தனது உரோமத்தைக் கழட்ட ஆரம்பிக்கும். இக் காலத்தின் போது அம்முயல் குட்டிஈன சூடான சுத்தமான வசதியான இடம் அமைத்துக் கொடுத்தல் அவசியம்.

### தாயையும் குட்டிகளையும் பராமரித்தல்

இறந்த, பலவீனமான, அசாதாரணகுட்டிகளை அப்புறப்படுத்தவும்.


தாய்க்கு பசும்புல்; சிறிதளவு புண்ணாக்கு உண்ணக் கொடுக்கவும்.

குட்டிகள் 10 ஆம் நாளில் கண் திறக்கும்.

8ம் கிழமை தாயைக் குட்டிகளிலிருந்து பிரிக்கலாம்.

குட்டிகளை தாயிலிருந்து பிரிக்கும்போது தனித்தனியே நிறுத்து நிறையைப் பதிவு செய்து கொள்ளவும்.

குட்டிகளைத் தாயிலிருந்து பிரித்த சிலநாட்களில் மீண்டும் சினைப்படுத்தவும்.



முயலைப் பிடிக்கும் முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறைச்சிக்காக சந்தைப்படுத்தல்

ஐரோப்பிய நாடுகளில் குட்டிகள் 8 ஆம் கிழமையை அடைந்தவுடன் இறைச்சிக்காக வெட்டுவார்கள். 8 ஆம் கிழமையில் ஒரு முயலில் இருந்து 4 இருத்தல் இறைச்சியைப் பெற்றுக்கொள்ளலாம். ஆயினும் இலங்கை போன்ற நாடுகளில் ஒரு முயல் 4 இருத்தல் இறைச்சியைத் தரும்போது அதன் வயது கிட்டத்திட்ட 4—5 மாதமாக இருக்கும். இறைச்சிக்காக முயல் கொல்லப்பட 6 மணித்தியாலத்திற்கு முன்பே உணவுகொடுத்தலைத் தவிர்த்துக்கொள்ளவும்.

## நோய்கள்

### கருச்சிதைவும் இறந்துபிறத்தலும்

நோய் காரணமாகவோ அல்லது சினைப்பட்டமுயலை அதிர்ச்சிக்குள்ளாக்குவதன் மூலமோ கருச்சிதைவுகள் ஏற்படலாம்.

### குட்டிகளின் இறப்பு

குட்டிகள் பிறந்த முதல் கிழமையுள் இறப்புக் காணப்படுமாயின் அதிகமான குளிர், பலவீனமான குட்டிகள் இறத்தல், குட்டிகள் பால்குடியாமை, தாயில் பால் காணப்படாமை, அதிகளவு குட்டிகள் காணப்படுவதால் அல்லது முலைவீக்கம் போன்ற காரணிகளினால் இறக்கும்

### கொக்சிடியோசிஸ்

இந்நோயின்போது குட்டிகள் கும்பலாக குளிருதியது போன்று காணப்படுவதோடு உரோமம் சிலிர்ததும் வயிற்றோட்டமும் காணப்படலாம்.

### மற்றைய நோய்கள்

வயிற்றோட்டம், தடிமன், நியூமோனியா போன்ற நோய்களால் முயல்கள் இலகுவில் பீடிக்கப்படும். நோய்களை அவதானித்தவுடன் முயலை கால்நடை வைத்தியரிடம் எடுத்துச் சென்று சிகிச்சை பெறவும்.

### முயல் வளர்ப்பில் இலாபம்

முயல் வளர்ப்பில் இனப்பெருக்கத்திற்காக முயல்களை வாங்குவதற்கும், கூடு அமைப்பதற்குமே ஆரம்பத்தில் செலவாகிறது.

முயல்களுக்கு உணவூட்டுவதற்கு அதிக செலவாகாது. ஒரு வருடத்தில் ஒரு முயலிலிருந்து சராசரி 30 குட்டிகளைப் பெறலாம். இக்குட்டிகளிலிருந்து சராசரி 120 இருத்தல் இறைச்சி பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு இருத்தல் ரூபா 5/– வீதம் ஒரு வருடத்தில் இறைச்சியிலிருந்து ரூபா 600/– பெற்றுகொள்ளலாம். இதன்படி ஒரு முயலிலிருந்து ஒரு வருடத்தில் ரூபா 600/– ஆதாயம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதி கால்நடை வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவும்.

இப் புத்தகம் பற்றி ஏதாவது குறிப்புகள் இருப்பின் தகவல் பிரிவுக்கு அறியத் தரவும்.

இப்பிரசுரம் பண்ணையாளர்களாலும் விரிவாக்கல் உத்தியோகத்தர்களாலும் முன் மதிப்பிடப்பட்டது.

B/179 – Reprinted January 1994

அச்சிடு; அரசாங்க அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org